**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 122 /2018**

2026–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29–ம் நாள் வியாழக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 29.01.2026 | | |
| பெயர்: | கருணாநிதி<br>(DW–2 Cross ) | தகப்பனார் பெயர்: | கோவிந்தராசு |
| கிராமம்: | திருமுல்லைவாசல் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 60/2026 |

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 29.01.2026</u>**

**(ஆரம்பித்த நேரம்– 12.01)**

1. நான் 2ம் பிரதிவாதிக்காக சாட்சியமளிக்கிறேன். திருமுல்லைவாசலிலிருந்து செம்மங்குடிக்கு 17 கி.மீ இருக்குமா என்றால் இல்லை, 12 கி.மீ இருக்கும். எனக்கு வாதி, பிரதிவாதிகளை தெரியும். யார், யார் பெயரில் வழக்கிட்டுள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. எத்தனை அயிட்ட சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 2 அயிட்ட சொத்திற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. தாவா 2 அயிட்ட சொத்துக்களும் செம்மங்குடியில்தான் உள்ளது, அதன் சர்வே எண் பற்றி எனக்கு தெரியாது. விஸ்தீரணம் தெரியுமா என்றால் கோயில் இடம் 10 மா, பட்டா இடம் 12 மா. நான்கெல்லை பற்றி எனக்கு தெரியாது. கோயில் இடம் வாதிகளிடம் தான் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா செம்மங்குடியில் உள்ள பட்டா இடம் வாதிகளின் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 12.11)**

**6ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**